சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.109/2018</u>

<u>18.03.2025</u>

<u>பி.வா.சா.1 திரு. சேகர், த/பெ. தெட்சிணாமூர்த்தி</u>

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்போது 70 வயதாகிறது. எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்றாக தெரியுமா என்றால் தெரியும். வழக்கு விவரங்களை வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். தாவா சொத்திலுள்ள கட்டிடம் எனக்கு சொந்தமானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா கட்டிடத்தின் அடிமனை 1, 2 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தின் நகர அளவை எண், விஸ்தீரணம் என்னவென்றால் அளவு எனக்கு ஞாபகமில்லை. விஸ்தீரணம் 1875 சதுரடியாகும். தாவா கட்டிடத்தில் அச்சுதொழில் என்னுடைய தகப்பனார் 1975 லிருந்து நடத்திவந்தார். என் தகப்பனார் 1990 ல் காலமானார். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி, குப்பம்மாளுக்கும் என்ன உறவு முறை என்றால் என்ன உறவு முறை என்று தெரியாது ஆனால் நெருங்கிய சொந்தம். பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி சொல்லி தெரியும். என்னிடம் காட்டப்படும் பிராதில் உள்ள விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. 1975 லிருந்தே எனது தகப்பனாருடன் தான் பிரஸில் வேலை பார்த்துவருகிறேன். 1, 2 பிரதிவாதிகள் தகப்பனார் தெட்சிணாமூர்த்திக்கு தாவா இடத்தை சுற்றி லாட்ஜ், கடைகட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள பகுதி பஸ்ஸ்டாண்ட் என்றாலும் வியாபார பகுதி என்றாலும் சரிதான். தெட்சிணாமூர்த்தி சுப்பையா என்ற பெயரில் மருந்துகடை வைத்திருந்தார் என்றால் சரிதான். எனவே தெட்சிணாமூர்த்தி நல்ல வருமானம் உள்ள நபர் என்றால் இல்லை. 1975 ல் தெட்சிணாமூர்த்திக்கு எந்த கடையும் இல்லை. தற்போதுதான் அவருக்கு கடைகள் உள்ளது. தெட்சிணாமூர்த்தியின் குடும்ப விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் பள்ளிபடிப்பை சென்னையில் படித்தார்கள். எந்த பள்ளிக்கூடம் என்று எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் பள்ளிபடிப்பை திருவாரூரில் தான் முடித்தார்கள் என்றாலும் கல்லூரி படிப்பிற்கு மட்டுமே சென்னைக்கு சென்றார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் எங்கு பணியிலிருந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா அடிமனை 1, 2 பிரதிவாதிகளுக்கு சொந்தமானது

என்றால் சரிதான். தெட்சிணாமூர்த்தி சில சொத்தை வாடகைக்கு விட்டதாக பிராதில் சொல்லியுள்ளதை யார் யாருக்கு வாடகைக்கு விட்டார் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் தெட்சிணாமூர்த்தி, 1,2 பிரதிவாதிகள் தெட்சிணாமூர்த்தியுடன் தாவா சொத்தில் கடை உரிமையாளர், வாடகைதாரர் என்ற முறையில்தான் வந்தோம் என்றால் சரிதான். தாவாவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விவரம் என்ன என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் படிக்க முடியாத நிலையில் உள்ளது என்றால் சரிதான். எதற்காக வா.சா.ஆ.1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் 1975 ஆம் வருடம் ஏற்பட்டதாக உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் முதலாவதாக வீராசாமி மகன் தெட்சிணாமூர்த்தி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தியின் இன்சியல் T. தெட்சிணாமூர்த்தி என பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3 வதாக ஹரிகோவிந்தம்பிள்ளை மகன் தெட்சிணாமூர்த்தி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஹரிகோவிந்தம்பிள்ளை மகன் தெட்சிணாமூர்த்தி தான் என் தகப்பனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் தாவா சொத்துக்கு சம்பந்தமானது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் அடிமனைக்கு வாங்கப்பட்டது என்றால் சரிதான். அடிமனை 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்திக்கு சொந்தமானது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயர் எப்படி வந்தது என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை.

(இந்நீதிமன்றம் சாட்சியின் நடவடிக்கை இந்திய சாட்சிய சட்டப்படி இந்நீதிமன்றம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் பார்த்ததில் சாட்சி பெரும்பாலான இடத்தில் பதிலளிக்காமல் அமைதியாக இருந்து வருகிறார்).

எனக்கும் எனது தகப்பனாருக்கும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி நெருங்கிய உறவினர் இல்லை என்றால் சரியல்ல, உறவினர்தான். தாவா சொத்து திருவாரூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். நகராட்சியிடம் கட்டிடம் கட்ட அனுமதி வாங்கவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டிடம் கட்ட 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்திக்கு அனுமதி வழங்கப்படும் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் தாவா சொத்தில் கட்டிடத்தை நாங்கள் கட்டியிருந்தால் எனது தகப்பனார் பெயரில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டிருக்கும் என்றால் அப்போது இருந்த சூழ்நிலை எனக்கு தெரியாது. கட்டிடம் நாங்கள் கட்டினோம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை.

வா.சா.ஆ.3 ஆவணத்திலும் எனது தகப்பனார் பெயரில் போடப்பட்டுள்ளது என்றாலும் அந்த ஆவணம் தாவா சொத்தின் அடிமனைக்காக ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் தாவா சொத்தில் நானோ, எனது தகப்பனாரோ கட்டிடம் கட்டவில்லை என்றால் சரியல்ல, நாங்கள்தான் கட்டினோம். தாவா சொத்தில் எனது தகப்பனார் வாடகைதாரர் என்ற முறையில்தான் கடைக்கு வந்தார் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு கட்டிடம் கட்ட ரூ.31,000/- செலவானதை முன்பணமாக கழித்து கொள்ள வேண்டும் என்று 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி சொல்லவில்லை என்றாலும் நாங்கள் எந்த செலவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திலுள்ள கட்டிடத்தை நாங்கள் ரூ.31,000/- செலவு செய்து கட்டியதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும், பிரதிவாதிகளின் தகப்பனாரக்கும் இடையே கடை கட்டிடம் கட்டிக்கொள்வது சம்பந்தமாக எழுத்து பூர்வமான ஆவணம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, எழுதிக்கொடுத்தார்கள் அந்த ஆவணம் கடை தீ பிடித்தபோது எறிந்துவிட்டது. சாட்சி மீண்டும் தன்னிச்சையாக கடைக்கு உள்ளே மழைநீர் புகுந்த போது ஆவணம் அழிந்துவிட்டதாக சாட்சியமளிக்கிறார். மேற்சொன்ன விவரங்களை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. தாவா சொத்தை 10 வருடங்கள் கழித்து எங்களுக்கு விற்பனை செய்துவிடுவதாக பிரதிவாதிகளின் தகப்பனார் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குண்டான வரி ரசீதுகள் எனது தகப்பனார் பெயரில் முன்பு இருந்தது தற்போது பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. எனது தகப்பனார் பெயரில் செலுத்திய வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை 1997 வரை நாங்கள் வரி செலுத்தினோம். தாவா சொத்துள்ள கட்டிடத்திற்கு மின் இணைப்பு உள்ளது என்றாலும் மின் கட்டண ரசீதும் உள்ளது என்றாலும் சரிதான். வா.சா.ஆ.9 முதல் 13 ஆவணங்களில் தெட்சிணாமூர்த்தி என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் தெட்சிணாமூர்த்தி பெயர் முன்பு இன்சியல் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். தாவா சொத்திலுள்ள மின் இணைப்பு 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தெட்சிணாமூர்த்தி பெயரில்தான் உள்ளது. வா.சா.ஆ.8 ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்லியுள்ளது போல் தாவா கடைக்கு ரூ.31,000/- முன்பணமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் 2 சகோதரிகளும், 7 சகோதரர்களும் பிறந்தார்கள். தற்சமயம் வரை எங்கள் சகோதர்களுக்குள் எந்த பிரச்னையும் கிடையாது. தற்சமயம் வரை தாவா இடத்தில் கமலாம்பிகா பிரஸ் என்ற பெயரில் தொழில் செய்துவருகிறேன். தாவா கடை கட்டிடத்திற்கு மின் இணைப்பு உள்ளது. தாவா கடை

கட்டிடத்தில் நான் தொழில் செய்துவருவதை காண்பிக்க மின் இணைப்போ அல்லது அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தொழில் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் அனைத்தும் உள்ளது. தாவாவில் உள்ள கடை கட்டிடத்தில் மேற்கூரை தீ பிடித்தது. தீ பிடித்த பின்னிட்டு மேற்கூரை இல்லை என்றால் பின்னிட்டு மேற்கூரையை 2 வது தடவையாக கட்டுமானங்கள் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உரிய அனுமதி நகராட்சியிடமோ, உரிமையாளரிடமோ பெறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் நகராட்சி எல்லைக்குள் அனுமதி பெறாமல் கட்டிடம் எதுவும் கட்டமுடியாது என்றால் சரியல்ல. இந்த சொத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்துக்களின் தகப்பனார் அ.வ.எண்.38/2006 ல் என் பெயரிலும் மற்ற சகோதரர்கள் பெயரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். அதில் வழக்கு நடத்தப்பட்டு தெட்சிணாமூர்த்தி இறந்த பின்னிட்டு அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. சமூகம் நீதிமன்றத்தில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேல்முறையீட்டு வழக்கு எண்.22/2019 வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. மேல்முறையீட்டு வழக்கு எண்.22/2019 வழக்கின் விவரம் எனக்கு தெரியாது. அ.வ.எண்.38/2006 வழக்கின் சொத்தை ஆணையர் பார்வையிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் மேல்முறையீடு செய்தேன் என்றாலும் தற்போது பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆவணம் எனக்கும் என் சகோதரர்களுக்கும் அனுப்பப்பட்ட அறிவிப்பா என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் அனைவரையும் நாங்கள் வழக்கில் சேர்க்கவேண்டும் என சொன்னதால் அனைவருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.38/2006 வழக்கில் நான் ஆட்சேபணை செய்ததால் தான் தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் அனைவரும் தரப்பினராக சேர்க்கப்பட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து எனக்கு நகர குடியிருப்பு சட்டத்தின் கீழ் எந்த உரிமையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.38/2006 வழக்கில் எங்களுக்கு உரிமையில்லை என்பதை தெரிந்துக்கொண்டுதான் அசல் வழக்கை 13 வருடங்களாக நடத்தினேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வித உரிமையும் இல்லையென தெரிந்துக்கொண்டே பிரதிவாதிகளுக்கு வீண் அலைச்சல் கொடுக்க வேண்டும் என்பதற்காக மேல்முறையீடு செய்து தாக்கல் செய்துவிட்டு தற்போது தெரியாது என பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.38/2006 வழக்கில் நான் சாட்சியமளிக்கவில்லை என்றாலும் எதிர்தரப்பினரை நாங்கள் குறுக்குவிசாரணை செய்யவில்லை என்றாலும் எனக்கு

தெரியாது. இந்த வழக்கிலும் மேல்முறையீட்டு வழக்கிலும் அ.வ.எண்.38/2006 வழக்கிலும் ஒரே வழக்கறிஞர் என்றால் சரிதான். பிரஸில் 3 நபர்கள் வேலை பார்க்கிறார்கள். எனது சகோதரர் தனியாக பிரஸ் வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரஸ் எதுவும் இல்லை என்றாலும் நான் எனது சகோதரருக்கு சொந்தமான பிரசில் தான் வேலை பார்க்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் பிரஸ் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பிரஸ் உள்ளது என்பதை காட்ட ஆணையர் நியமனம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் 1250 சதுரடியில் கடை கட்டிடம் உள்ளது. தாவா சொத்தை ஆணையர் பார்வையிட்டுமேற்கூரை எதுவும் இல்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.